## கேப்டன் விஜயகாந்துக்கு பத்மபூஷன் விருது அறிவித்தமைக்கு நன்றி!

# தமிழ்நாட்டிலிருந்து பத்மவிபூஷன் - பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வாகியுள்ளவர்களுக்கு வாழ்த்துகள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன.28-**

**தமிழ்நாட்டிலிருந்து நாட்டின் உயரிய விருதான பத்மவிபூஷன் விருதுக்குத் தேர்வாகியுள்ள மூத்த கலைஞர்கள் வைஜெயந்தி மாலா மற்றும் பத்மா சுப்ரமணியம் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்ததுடன் தமிழ்நாட்டிலிருந்து பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வாகியுள்ளவர்களுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

**மேலும் மறைந்த கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்குப் பத்மபூஷன் விருது அறிவித்தமைக்கு முதல்வர் அவர்கள் நன்றியைத் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டில் இருந்து நாட்டின் இரண்டாவது உயரிய விருதான பத்மவிபூஷன் விருதுக்குத் தேர்வாகியுள்ள மூத்த கலைஞர்கள் வைஜெயந்தி மாலா மற்றும் பத்மா சுப்ரமணியம் ஆகிய இருவருக்கும் எனது வாழ்த்துகள்.

மேலும் பத்மஸ்ரீ விருதுக்குத் தேர்வாகியுள்ள பத்திரப்பன் (கலை) ஜோஷ்னா சின்னப்பா (விளையாட்டு), ஜோ டி குரூஸ் (இலக்கியம்), சேஷம்பட்டி சிவலிங்கம் (கலை), நாச்சியார் (மருத்துவம்) ஆகியோருக்கும் எனது வாழ்த்துகள்.

தமிழ்நாட்டில் பிறந்து பப்புவா நியூ கினியில் ஆளுநர் பொறுப்பு வரை உயர்ந்த திரு. சசீந்திரன் முத்துவேல், அந்தமானைச் சேர்ந்த இயற்கை விவசாயியான திருமதி செல்லம்மாள் ஆகியோரையும் பத்மஸ்ரீ விருது பெறுவதற்காகத் தமிழனாகப் பாராட்டி மகிழ்கிறேன்.

அண்மையில் மறைந்த எனது நண்பர் கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்குப் பத்மபூஷன் விருது அறிவித்தமைக்காக எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆதிதிராவிடர் - பழங்குடியினர்

# தொழில் முனைவோருக்கான கண்காட்சி - கருத்தரங்கம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன.28-**

**சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை (TN BEAT EXPO2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.01.2024) தொடங்கி வைத்தார்.**

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை சார்பாக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) தென்னிந்திய வரலாற்றில் முதல் முறையாக தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை (TN BEAT EXPO 2024) சென்னை வர்த்தக மையத்தில் இன்றைய தினம் தொடங்கி வைப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் தங்களது வாழ்வாதாரத்தை மேன்மைபடுத்திட ஏதுவாக இவ்வரசு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம், சுயஉதவிக்கான பொருளாதார கடனுதவி திட்டம், துரித மின் இணைப்பு திட்டம் நிலம் வாங்கும் திட்டம், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தூய்மைப் பணியாளர் நலவாரியத்தின் திட்ட உதவிகள், கல்விக்கடன் திட்டம், மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை மூலம் தொழில் தொடங்குவதற்கான மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை தொழில் முனைவோர்களாக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இக்கண்காட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 8,000க்கும் மேற்பட்ட பொருட்களானது 410 அரங்குகளிலும், வணிக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகன உதிரி பாகங்கள், இரசாயனப்பொருட்கள், மின் மற்றும் மின்னணுவியல், வேளாண்மைக் கருவிகள், கட்டுமான தொழில்சார்ந்த உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் என 187அரங்குகள், அரசு பொதுத்துறையை சார்ந்த பூம்புகார் நிறுவனம், தமிழ்நாடு மினரல்ஸ் லிமிட்டேட், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், ஆவின், போன்ற 28 அரங்குகள் மேலும், தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள் மூலம் 10 அரங்குகள் பொதுமக்களின் பார்வைக்காக அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், வணிகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையே நேரடி விற்பனையினை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து தொழில்முனைவோர் முதலீட்டாளர்கள், தொழில் அதிபர்கள், சுயதொழில் செய்பவர்கள், வர்த்தகர்கள், வணிகர்கள் மற்றும் தொழில்துறையைச் சார்ந்த மாணவர்களையும் இந்நேரத்தில் பாராட்டுகிறேன்.

இக்கண்காட்சியினால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குயின தொழில் முனைவோர்கள் தங்களது உற்பத்தி பொருட்களை கண்காட்சியில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ளவும், ஒன்றியம் மற்றும் மாநில அரசு பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் முன்னணி நிறுவனங்கள் தங்களின் தயாரிப்பு பொருட்களை நேரடி கொள்முதல் செய்வதற்கான வாய்ப்புகளையும், தொழில் முனைவோர் புதிய தொழில் துவங்குவதற்கும் மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் பெறவும், குறு, சிறு தொழிலாளர்கள் தயாரிக்கும் உற்பத்தி பொருட்களை வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் தொழில்துறையில் சிறந்து விளங்கும் சிறப்பு வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கமும் நடைபெறுகிறது.

பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், தா. மோ. அன்பரசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழக தலைவர் உ. மதிவாணன், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.கே.கிரி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி அமுலு விஜயா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி. க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த. ஆனந்த், பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் அண்ணாதுரை மற்றும் தொழில் முதலீட்டாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## இராமர் கோவில் திறப்பு விழாவினைக் கண்டிக்கும் வகையில் பதாகைகள்!

# புனே திரைப்படக் கல்லூரி மாணவர்கள் மீது தாக்குதல்!

## காவிக் கும்பல் வன்முறை வெறியாட்டம்!

*மும்பை, ஜன. 28-*

அயோத்தியில் பாபர் மசூதியை இடித்துவிட்டு அதே இடத்தில் ராமன் கோயில் கட்டப்பட்டு அதன் திறப்புவிழா நடைபெற்றது. அதனைக் கண்டிக்கும் வகையில் புனே திரைப்படக் கல்லூரி மாணவர்கள் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையில் 'பாப்ரியை நினைவு கொள்வோம், அரசமைப்புச் சட்டம் கொல்லப்பட்டது' என்று பதாகைகளை வைத்துள்ளனர்.

அங்கு புகுந்த காவிக்கும்பல் 'ஜெய்சிறீராம்' என்று முழக்க மிட்டபடி, பதாகைகளைத் தீவைத்து எரித்தும், மாணவர்களைத் தாக்கியும் வன்முறை வெறியாட்டம் போட்டுள்ளது. தாக்கப்பட்ட மாணவர்களில் 4பேர் படுகாயமடைந்தனர்.

தாக்குதலை தடுத்து நிறுத்தவோ, வன்முறை வெறியாட்டம் போட்ட காவிக் கும்பலைஅப்புறப்படுத்தவோ பாதுகாப்புக்கான காவலர் எவரும் முனைப்புக் காட்டவில்லை என்று மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கல்வி நிறுவனத்துக்குள் சுமார் 20 முதல் 25 பேர் கொண்ட கும்பல் பட்டப் பகலில் பிற்பகல் 1.30 மணியளவில் நுழைந்து வன்முறை வெறியாட்டம் போட்டுள்ளனர். மாணவர் சங்கத் தலைவர் மான்காப் நோக்வோகம் நுழைவாயிலை நோக்கிச் சென்ற போது, "ஜெய்சிறீராம்" என்று கத்திக்கொண்டே நுழைந்த காவிக்கும்பல் மாணவர் சங்கத் தலைவரைத் தாக்கிய போதும் பாதுகாப்புக்கான காவலர்கள் அமைதியாக இருந்துள்ளனர்.

காவிக் கும்பலின் வன்முறை குறித்து பாதுகாப்புக்கான காவலர்களிடம் கேள்வி எழுப்பிய மாணவர் சங்க பொதுச்செயலாளர் சயந்தனும் அக்கும்பலால் கடுமையாகத் தாக்கப்பட்டார். இந்தத் தாக்குதல் 23.1.2024 அன்று அரங்கேற்றப்பட்டுள்ளது. இதேபோல் கடந்த 21.1.2024 அன்றும் கல்வி நிறுவனத்துக்கு வெளியே கூடிய கும்பல் மேலும் அதிகமானவர்களுடன் வருவதாக எச்சரித்துச் சென்றது என்கின்றனர் மாணவர்கள். அந்த எச்சரிக்கை குறித்து கல்வி நிறுவனத்துக் கான காவல் அதிகாரி சஞ்சய் ஜாதவ் மற்றும் பதிவாளர் பிரதீக் ஜெயின் ஆகியோரிடம் முறை யிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாணவர்கள் தரப்பில் கூறும்போது, "அப்பாவி மாணவர்கள் மீது குண்டர்கள் தாக்குதலை நடத்திய போது, கல்வி நிறுவனத்தில் பணியிலிருந்த பாதுகாப்புக் கான காவலர்கள் மற்றும் பணியாளர்கள் வெறுமனே பார்வையாளர்களாகவே இருந்தனர். வன்முறைகளால் மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப் பட்டது. மாணவர் களின் அடிப்படை உரிமையான வாழ்வுரிமையுடன் ஜனநாயக உரிமைகளும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதை மாணவர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது." என்றனர்.

இந்தக் கல்வி நிறுவனத்துக்குத் தலைவராக ஒன்றிய பா.ஜ.க. அரசால் நியமிக்கப்பட்டுள்ளவர் திரைக்கலைஞர் மாதவன். இதுவரை அவர் இந்த வன்முறைகுறித்து மூச்சு விடவில்லை.

அயோத்தியில் ராமன் கோயில் விழா நடத்தப்பட்ட அடுத்த நாளிலேயே இவ்வளவு வன்முறைகளும் காவிக்கும்பலால் அரங்கேற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் உழவர் சந்தை அருகே நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு உரையாற்றினார் நிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், எம்.எல்.ஏ.க்கள் பழனியாண்டி, ஸ்டாலின் குமார், கதிரவன், இனிக்கோ இருதயராஜ், தலைமைக் கழக பேச்சாளர் கரூர் முரளி மற்றும் கழக நிர்வாகிகள் முத்துச்செல்வம், விஜயராஜ், கருணாநிதி, மாத்தூர் கருப்பையா, சேர்மன் துரைராஜ், கதிர்வேல், டோல்கேட் சுப்பிரமணி, போட்டோ கமால் மோகன்தாஸ், நாகராஜ், கண்ணன், கலைச்செல்வி கிராப்பட்டி செல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், நேற்று முன்தினம் (26.01.2024) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் இரண்டு நாட்கள் (26.01.2024 மற்றும் 27.01.2024) நடைபெற்ற தொழில் முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் தலைவர் உ.மதிவாணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த.ஆனந்த், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள், தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி மாநிலத்தில் 'திராவிட மாடல்' அரசு அமைவது நிச்சயம்!

## வீரவணக்க நாள் கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பேச்சு!

*புதுச்சேரி, ஜன. 28-*

புதுச்சேரி மாநில தி.மு.க. மாணவர் அணி மற்றும் நெல்லித்தோப்பு, காமராஜர் நகர் தொகுதிகள் சார்பில் மொழிப்போர்க் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சாரம் அவ்வைத் திடலில் நடந்தது.

மாநில மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.பி. மணிமாறன் தலைமை வகித்தார். முன்னாள் அவைத்தலைவர் வழக்கறிஞர் பலராமன், திமுக பொதுக்குழு உறுப்பினர் வே. கார்த்திகேயன், தொகுதி செயலாளர்கள் செ. நடராஜன், ர. சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பெ. வெலவன், ஆர். கோகுல், முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா. ஜெயப்பிரகாஷ் என்கிற ஜேபி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஸ்டீபன்ராஜ், ஸ்ரீஹரி, அமுதன், கீர்த்தி எழினி, தமிழ்மகள் ஜான்சிராணி, முத்தரசன் ஆகியோர் வரவேற்று பேசினார்கள்.

தி.மு.க. தேர்தல் பணிக்குழு தலைவரும், தமிழக உயர்கல்வித் துறை அமைச்சருமான ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளருமான இரா. சிவா மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் இலயோலா த. ராஜசேகர் ஆகியோர் மொழிப்போர் தியாகிகளுக்கு பொற்கிழி வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கவுரவித்தார்கள்.

கூட்டத்தில் தமிழக அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பேசியதாவது:-

ஒன்றிய அரசின் உதவியை எதிர்பார்க்காமலேயே தமிழ்நாட்டில் எண்ணற்ற திட்டங்களை திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. திராவிட ஆட்சியை அசைத்துவிடலாம் என்ற ஒன்றிய பாஜக அரசின் எண்ணம் ஒருபோதும் பலிக்காது. திராவிட இயக்கம் இருந்தால் தான், வளர்க்கப்பட்டால் தான் தமிழ்நாடு தமிழ்நாடாகவும், புதுச்சேரி புதுச்சேரி யாகவும் இருக்கும். தமிழகத்தை ஒட்டியுள்ள புதுச்சேரியிலும் திராவிட இயக்கத்தின் ஆட்சி இருந்தால் நன்றாகத் தான் இருக்கும். இதுபற்றி திமுக தலைமை முடிவு செய்யும். திமுக தலைவரை பற்றி பேச அண்ணாமலைக்கு என்ன தகுதி இருக்கிறது?. ராமரை வைத்து அரசியல் செய்யக்கூடாது. ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு ஏன் குடியரசுத் தலைவரை அழைக்கவில்லை?. இது போன்று கேள்விகளை திமுக முன்வைத்தால் அமலாக்கத்துறை, வருமான வரித்துறைகளை வைத்து மிரட்டுவது. எந்த உருட்டல், மிரட்டலுக்கெல்லாம் நாங்கள் பயப்படவும் மாட்டோம், அடிபணியவும் மாட்டோம். தமிழ்நாட்டில் ஒருகாலமும் பா.ஜ.க. மலராது. புதுச் சேரியில் திராவிட மாடல் அரசு அமைய தி.மு.க. அமைப்பாளர் சிவா கடுமையாக பாடுபடுகிறார். இதுகுறித்து கழகத் தலைவரிடம் எடுத்துச் சொல்லி, எதிர்வரும் தேர்தலில் திமுக வெற்றி பெற்று புதுச்சேரியில் மீண்டும் திராவிட மாடல் அரசு அமையும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, எல். சம்பத், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம் என்கிற சரவணன், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக் குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், அ. சோமசுந்தரம், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், வீ. சண்முகம், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், ப. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், வே. மாறன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல்.மணிகண்டன், து.சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா.ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ.மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், கலிய. கார்த்திகேயன், சே. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், ச.அசோக் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.

கூட்ட நிறைவில், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் ந. கண்ணன் நன்றி கூறினார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டியில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்கநாள் பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் மற்றும் மாணவரணி துணை அமைப்பாளர் டி.ஜெ.ஜி.தமிழரசன், பி.தனலட்சுமி தலைமையில் நடைபெற்றது. கழக கொள்கைப்பரப்பு மாநில செயலாளரும், கழக மாநிலங்களவை குழுத் தலைவருமான திருச்சி.சிவா எம்.பி., தலைமைக் கழக சொற்பொழிவாளர் கதிர் மீனாட்சி சுந்தரம், பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் ஜெ.மூர்த்தி, கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பி.வெங்கடாசலபதி, பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, ஒன்றிய பேரூர் செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே.ஆனந்தகுமார், ந.பரிமளம், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேல், ஜான் (எ) பொன்னுசாமி, இரா.அறிவழகன், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், ஜி.ஸ்டாலின், சகிலாஅறிவழகன், டி.சங்கர் என்.கிருஷ்ணாமூர்த்தி, மு.பாஸ்கரன், கே.ஆறுமுகம், பா.தனசேகரன், எஸ்.கோபி. வி.பி.இரவிக்குமார், க.சம்பத், எம்.ஆர்ஸ்ரீதர், ஜி.ரமேஷ், ஜி.சுமன், கே.ராஜேஷ், டி.மணி, கோல்டுடி.மணி, டி.லக்ஷ்மிநாராயணன் எம்.ராமஜெயம், எம்.கேசவன், பா.பரத்குமார், அப்துல்கரீம் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.